# மதுரை மாவட்டம்

## அரையாண்டுத் தேர்வு

**வகுப்பு : 12** **பாடம் : வரலாறு**

## விடைக்குறிப்பு

### பகுதி – I **20 X 1 = 10**

1. அ) 1915
2. இ) தாதாபாய் நௌரோஜி
3. அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்
4. இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்
5. அ) **ii, iv,i ,iii**
6. ஆ) கோகலே
7. அ) பஞ்சாப் துணை ஆளுநர் 1 ரெஜினால்டு டையர்
8. இ) பம்பாய் - தானே
9. (அ) 3 1 4 2
10. இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்
11. இ) ஆந்திரா
12. இ) வினோபா பாவே
13. இ) 100
14. இ) ரோஜர் பேக்கன்
15. (ஈ) மடோனாவும் , குழந்தையும்
16. ஆ) 1773
17. அ) எல்பா
18. அ) அவந்தி
19. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்ககிறது .
20. ஆ) டிசம்பர் 8, 1991

### பகுதி – II **7 X 2 = 14**

21. தேசியம் :

❖ ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் , பக்தியோடும் இருத்தல்.

❖ தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்.

❖ தனது நாட்டின் பண்பாடும் மறறும் விருபபங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துதல்.

22. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியி ட்டட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்கள் :

❖ 1914 இல் தி காமன்வீல் என்ற வார ந்திரப் புத்தகம்.

❖ 1915 இல் **“How India W ought for Freedom”** என்ற தலைப்பிலான புத்தகம்.

❖ 1915 ஜுலை 14 இல் நியூ இந்தியா என்ற தினசரி.

23. பகிஷ்கிரித் ஹிடாகரினி சபா :

❖ அம்பேத்கர் புதிய பத்திரிக்கைகள் மறறும் அமைப்புகளைத் தோற்றுவித்தார்.

❖ பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை (தனித்துவிடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு) என்ற அமை பைத் தொடங்கினார்.

❖ தீண்டாமை கொடுமைகளு உள்ளாக்கப்பட்ட மக்களின் மீது விதிக்கப்பட்ட திறன் குறைபாடுகளைக் களைவதற்காக பாடுபட்டார்.

24. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா :

❖ இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் ஜே.என். டாடா ஆவார்.

❖ 1868 இல் நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் என்றானது.

- ❖ இந்திய அறிவியல் கழகம் ஒன்றை பெங்களூரில் டாடா குழுமம் நிறுவியுள்ளது.

25. ஆகஸ்ட் கொடையின் சிறப்பு :
    - ❖ வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து.
    - ❖ அதிகமான இந்தியர்களைக் கொண்டு அரசபிரதிநிதிகளின் குழுவை விரிவாக்கம் செய்தல்.
    - ❖ இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.

26. ஜே வி பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் :
    - ❖ குறுகிய மொழிவாரி பிராந்தியவாதத்தை வலியுறுத்துகின்றன.
    - ❖ அது நாட்டின் மேம்பாட்டிற்கு "அச்சுறுத்தலாக" உருவாகக்கூடும் என்றும் தெரிவித்தது.
    - ❖ இக்குழு " மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது.

27. பூமிதான இயக்கம் :
    - ❖ பூமிதான இயக்கத்தை தொடங்கியவர் வினோபா பாவே ஆவார்.
    - ❖ பெரும் நில உடைமையாளர்கள் தாமாக முன் வந்து உபரி நிலங்களை வழங்க வேண்டும்.
    - ❖ இம்முயற்சி மக்களை பெரிதும் கவர்ந்தது.

28. பாஸ்டன் தேநீர் விருந்து :
    - ❖ பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்காகளைப் போல வேடம் தரித்தனர்.
    - ❖ பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பலகளில ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.
    - ❖ இந்நிகழ்வு பாஸ்டன் தேநீர் விருந்து என அழைக்கப்பட்டது

29. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததற்கான காரணங்கள் :
    - ❖ பிரான்சு நாடு அல்சேசையும, லொரைனையும் இழந்தமைக்குப பழி வாங்கக்கூடும் என்று பிஸ்மாக் எதிர்பார்த்தார்.
    - ❖ அதனால் பிரான்சை தனிமைப்படுத்த அவர் தீமானம் கொணடார்.

30. ஷுமன் திட்டம் :
    - ❖ பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சரான "ராபர்ட் ஷுமன்" பிரான்சுக்கும , ஜெர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டால் நனமை பயக்கும் என அறிவித்தார்.
    - ❖ இரு நாடுகளின் நிலக்கரி மற்றும் எ·கு உற்பததியை உயர்மட்ட ஆணையம் எனும் கட்டமைப்பிற்குள் வைத்து நிர்வகிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தார்.
    - ❖ இத்திட்டம் பரஸ்பர ஆர்வத்தை உருவ கி இரு நாடுகளையும் தானாகவே இணைந்தது.

## பகுதி – III                7 X 3 = 21

31. மெக்காலேயின் இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் :
    - ❖ 1835 இல மெக்காலே தனது புகழ்பெற்ற "இந்தியக் கல்வி குறிதத குறிப்புகள் " எனும் குறிப்புகளை வெளியிட்டார்.
    - ❖ ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாக வாதிட்டார்.
    - ❖ ரத்தத்திலும் , நிறத்திலும் இந்தியராக இருக்க வேணடும்.
    - ❖ விருப்பத்தில் , கருத்தில் , ஒழுக்க நெறிகளில் , அறிவில் ஆங்கிலேயராய் இருக்க வேண்டும்.

32. அலிப்பூர் வெடிகுண்டு வழககின் முக்கியத்துவம் :
    - ❖ அரவிந்த கோஷ் அவரின் சகோதரர் பரீந்தர் குமார் கோஷ் அவர்களுடன் மேலும் 35 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.
    - ❖ சித்தரஞ்சன் தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார்.
    - ❖ போதிய ஆதாரங்கள் இல்லாததால் அரவிந்த கோஷ் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
    - ❖ ஏனையோர் ஆயுட்காலத்திற்கும் நாடு கடத்தப்பட்டனர்.
    - ❖ பொதுமக்களுக்கு முன்னர் புரட்சிகர தேசியவாதிகளை கதாநாயகர்களாகச் சித்தரித்தது.

33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்கள் :

- ❖ பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவதாகும்.
- ❖ தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவதாகும்.

ஒன்று திலகர் தலைமையிலும் , மற்றொன்று பெசண்ட் தலைமையிலும் என 1916 இல் நாட்டில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன .

34. ஜாலியன் வாலாபாக் படுகொலை :

- ❖ 1919 ஏப்ரல் 13 இல் அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் பகுதியில் அமைதியான வகையில ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக குழுமியிருந்தனர்.
- ❖ பஞ்சாபின் துணை நிலை ஆளுநர் ஓ டையர் ஆர்ப்பாட்டக்காரர்களை குறிவைத்து எந்திரத் துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை சுடுமாறு உத்திரவிட்டார்.
- ❖ இதில் அரசு தகவல்களின்படி 379 பேர் உயிரிழந்தனர்.
- ❖ இரவீந்தரநாத் தாகூர் தனது அரசப் பட்டத்தை உடனடியாக துறந்தார்.

35. 1909 ஆம் ஆண்டின் மிண்டோ – மார்லி சீர்சிருத்தங்களின் முக்கியத்துவத்துவம் :

- ❖ முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி முறையை அறிமுகப்படுத்தியது .
- ❖ இந்த முறையில் முஸ்லீம்கள் மட்டுமே முஸ்லீம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும் .
- ❖ பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லீம்களுக்கு வழங்கியது .
- ❖ மாகாண சட்டமன்றங்களில் முஸ்லீம் வேட்பாளர்களுக்கு மதராஸில் 4, பம்பாயில் 4 , வங்காளத்தில் 5 இடங்களை ஒதுக்கியிருந்தது .

36. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகள் :

- ❖ ஒரு நாடு மற்றொரு நாட்டின் நில எலலை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.
- ❖ இரு நாடுகளும் ஒன்றையெ னறு ஆக்கிரமிக்காமல் இருத்தல்
- ❖ ஒரு நாடு மற்றொரு நாடடின் உள்விவகாரங்களில் தலையி ாமல இருத்தல்.
- ❖ இரு நாடுகளுக்கும் இடையே சமத்துவம் ஒன்றுக்கொன்று பயனடைவதற்கான கூட்டுறவு.
- ❖ சமாதான சகவாழ்வு.

37. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் :

- ❖ வேளாண் உற்பத்தி திறன் அதிகரித்தது.
- ❖ உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது
- ❖ விவசாயிகளிடமிருந்த உபரி உணவு த னியங்களை அரசு சேமிப்பு கிடங்குகளில் சேமித்து வைத்தது.
- ❖ மக்களுக்கான உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.

38. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியதற்கான காரணங்கள் :

- ❖ உலகின் இதர பகுதிகளைக் காட்டிலும் இத்தாலியில் சமயச்சார்பின்மை , கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது.
- ❖ கிரேக்க ,ரோமானிய கலாசசாரங்களின் கடந்த கால படைப்புகளையும் கண்டுபிடித்தனர்.
- ❖ சடடம் , தத்துவியல் படிப்புகளுக்கு பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
- ❖ கிழக்கிந்திய நாடுகளுடனான வர்த்தகத்தை புத்துயிர் பெறச செய்தது.

39. பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோசம :

- ❖ 19 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் ஏற்பட்ட முன்னேற்றம் ஐரோப்பா முழுவதும் தாக்கத்தை ஏற்படுததியது.
- ❖ ஐரோப்பாவில் எழுந்த மக்களாட்சி உணர்வை ஒடுக்க வான்மெட்டர்னிக் முனைந்தார்.
- ❖ அவரது கூற்று தான் பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோசம் பிடிக்கும்.
- ❖ புரட்சி வெடித்த 1789 , 1830 , 1848 ஆண்டுகளில் பிரான்ஸ் தும்மியதாக கொள்ள வேண்டும்.

40. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகள் :

- ❖ ஏறக்குறைய 6 கோடி நபர்கள் இறந்ததோடு வார்சா , கீவ் , டோக்கியோ மற்றும் பெர்லின் போன்ற நகரங்கள் தரைமட்டமாயின.
- ❖ ஐரோப்பா , ஆசிய நாடுகளில் பல துறைமுகங்கள் , பாலங்கள் , இருப்புப்பாதை இயந்திரங்கள் அழிக்கப்பட்டன.
- ❖ உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் , சோவியத் ரஷ்யாவும் உருவாயின.
- ❖ ஐரோப்பாவில் பல நாடுகளில் தொடர்ந்து கொண்டிருந்த மனனராட்சிக்கு அது முடிவுகட்டியது.

## பகுதி – IV 7 X 5 = 35

41. அ)

பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகள் :

- ❖ இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர்.
- ❖ ஆங்கிலேயர் வீழ்ச்சி , வறட்சி , பஞ்சம் போன்ற நிகழ்வுகளைக் கணககில் கொள்ளவில்லை.
- ❖ நிலத்தை "விற்பனை பொருளாகவும் " , "வேளாண்மையை வணிகமயமாகவும்" ஆக்கினர்.
- ❖ இங்கிலாந்தில் தொழில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகம் எனும் கொள்கையைப் பின்பற்றியது.
- ❖ ஐரோப்பியர்களுக்குச் சொநதமாயிருந்த நிலங்களில் இந்தியக் குத்தகை விவசாயிகள் அவுரியைப பயிரிடக் கட்டாயப்படுத்தினா
- ❖ ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போதும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.
- ❖ தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் வறுமை குறித்துத் தனது வாழ்நாள் முழுவதுமான ஆய்வைத் தொடங்கினார்.
- ❖ 1833 , 1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள் அரசாங்கத்தின் தூண்டுதல இல்லாமலேயே மக்களைப் புலம் பெயரக் கட்டாயப்படுத்தின .

அல்லது

ஆ)

இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கு :

- ❖ 1906 இல் வ.உ.சி ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைககு எதிராகச் சுதேசி கப்பல் ஒன்றை நிறுவினார் .
- ❖ வ.உ.சி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- ❖ வ.உ.சி S.S.கலியா , S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.
- ❖ வ உ சி யின் சுதேசி இயக்க முன்னெடுப்பு தேசியத் தலைவர்களால் பாராடடப் பெற்றது.
- ❖ 1907 இல் பிப்ரவரி மார்ச் மாதங்களில் வ.உ.சி தூத்துக்குடிக் கடற்கரையில் தினந்தோறும் பொதுக்கூட்டங்களில் பேசினார்
- ❖ 1908 இல் கோரல்மில் தொழிலாளர்களிடம் உரையாற்றினார்.
- ❖ 1908 மார்ச்12 இல் வ.உ.சி தேசதுரோகக் குறறததிற்காகக் கைது செய்யப்பட்டார்.
- ❖ 1908 ஜூலை 7 இல் வ.உ சி அரசுக்கு எதிராகப் பேசிய குற்றத்திற்காக அவருக்கு ஆயுள்தண்டனை (20 ஆண்டுகள்) விதிக்கப்பட்டது .

42. அ)


லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் :

- ❖ நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மத்திய கட்டுப்பாட்டிலிருந்து மாகாணங்கள் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.
- ❖ மத்திய மற்றும் மாகாண சட்டமேலவைகளின் உறுப்பினர்களில் 4/5 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்
- ❖ மாகாண மற்றும் மத்திய 4/5 உறுப்பினர்கள் பரந்துபட்ட வாக்குபதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும.
- ❖ மாகாணசபைத் தேர்தலகளில் முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்க காங்கிரஸ் ஒப்புக் கொணடது.
- ❖ தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப மாகாண மற்றும் மத்திய அரசுகள் நடக்க கடமைப்பட்டுள்ளன.

அல்லது

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் (1917 -1930 ) நிகழ்ந்த கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்

**i)** தூத்துக்குடி **ii)** கேதா **iii)** அலகாபாத் **iv)** மீரட் **v)** பாட்னா


இந்திய தேசிய இயக்கம்
(1917 - 1930)
வ
மே
கி
தெ
காஷ்மீர்
பெஷாவர்
அமிர்தசரஸ்
மீரட்
டெல்லி
லக்னோ
சௌரி சௌரா
குவாலியர்
கான்பூர்
சம்பரான்
அலகாபாத்
பாட்னா
மணிப்பூர்
ஜான்சி
வாரணாசி
சபர்மதி ஆசிரமம் (அகமதாபாத்)
கேதா
கல்கத்தா
மியான்மார்
(பர்மா)
தண்டி
நாக்பூர்
பம்பாய்
பூனா
சென்னை
வேதாரண்யம்
கேரளா
தூத்துக்குடி
அளவையில் இல்லை

43. அ)

பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் :

- ❖ பகத்சிங் ஆரம்ப காலக்கட்டத்தில் நவ்ஜவான் பாரத் சபா என்ற அமைப்பில தன்னை இணைத்துக்கொண்டார்.
- ❖ பின்னர் ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்ற அமைப்பில் இணைந்தார்.
- ❖ 1928 இல் ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்று பெயர் மாற்றினார்.
- ❖ ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.

பகத்சிங்கின் புரட்சிகர நடவடிக்கைகள் :

- ❖ 1929 ஏப்ரல் 8 இல் மததிய சட்டமன்றத்தில் குண்டு வீசி தாக்குதல் நடத்தினார்.
- ❖ லாகூர் சதி வழக்கில் ராஜகுரு , சுகதேவ் , ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங்கும் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர்.
- ❖ சாண்டர்ஸ் கொலை தொடர்பான விசாரணைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர்.
- ❖ இநத வழக்கில் பகத்சிங் , ராஜகுரு , சுகதேவ் ஆகியோருக்கு 1930 அக்டோபர் 7 அன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- ❖ லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று பகதசிங் , ராஜகுரு , சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

அல்லது

ஆ)

ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் :

- ❖ கூட்டு இந்திய அடையாளம் ஒன்று உருவாவதைத் தடுப்பதே பிரிட்டிஷாரின் நோககமாக இருந்தது .
- ❖ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டது .
- ❖ "பரித்தாளுதல் என்பது நமதாக வேண்டும்" என்று பம்பாய் ஆளுநா எ ' லினஸடோன் எழுதினார் .
- ❖ பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதக் கருத்தியல் சார்ந்த அரசியலுக்கு சட்டபூ வ அதிகாரத்தையும் , கௌரவத்தையும் வழங்கியது .
- ❖ பிரிட்டிஷ் இந்திய அரசு , வகுப்புவாதத்தை வளர்ப்பதற்கும் , பரப்புவதறகும் தனித்தொகுதி முறையை நடைமுறைப்படுத்தியது
- ❖ தனித்தொகுதி அறிவிப்பு மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளு ' கொள்கை என்ற கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை முழுமையாக அந்நியப்படுத்தியது .

44. அ)

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கு :

- ❖ 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினார்.
- ❖ காந்தியடிகள் மக்களை நோக்கி "செய் அல்லது செத்துமடி" என அழைப்பு விடுத்தார்.
- ❖ 1942 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலை காந்தியடிகள் உட்பட பலரை கைது செய்தனர்.
- ❖ கடையடைப்புகள் , மறியல்கள் , வேலை நிறுத்தங்கள் , வன்முறை மோதல்கள் நடந்தன.
- ❖ ஆரம்பத்தில் நகரங்களிலும் , இரண்டாம் நிலையில் கிராமங்களிலும் இயக்கம் பரவியது.
- ❖ காவல் நிலையங்கள் , இரயில் நிலையங்கள் ,அஞ்சல் அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்டன.
- ❖ 1943 இல் காந்தியடிகள் சிறையல் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்
- ❖ 1943 ஆம் ஆண்டின் முடிவில 91,836 பேரை கைது செய்தனர் . 1060 பேர் பலியாகினர்.

அல்லது

ஆ)

இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை கோட்பாடுகள் :

- ❖ ஜவகர்லால் நேரு இந்திய வெளியுறவு கொள்கையின் முதன்மை சிற்பி.
- ❖ ஏகாதிபத்தியம் , காலனி ஆதிக்கம் , இனஒதுக்கல் ஆகியவற்றை ஒதுக்கல்.
- ❖ வல்லரசு நாடுகளுடன் அணிசேராமை.
- ❖ பிற நாடுகளின் உள்நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமை , ஆக்கிரமிப்பு செய்யாமை.
- ❖ ஒரு நாடு மற்றொரு நாட்டின் இறையாண்மை மற்றும் நில எல்லையை மதித்தல்.
- ❖ உலக அமைதியை பாதுகாத்தல் மற்றும் நாடுகளில் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க , ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கு :

- ❖ 1955 இல் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில் ஆப்பிரிக்க , ஆசிய நாடுகள் பங்கேற்றனர்.
- ❖ பெல்கிரேட் நகரில் இந்த நாடுகள் கூடி அணிசேரா இயக்கத்தை தோற்றுவித்தன.
- ❖ 1961 இல் அணுசக்தி ஆயுத குறைப்பு மற்றும் சமாதானத்திறகு அழைப்புவிடுத்தார்.

45. அ)

முதல் ஐந்தாண்டு திட்டத்தின் சாதனைகள் : ( 1951 – 56 )

- ❖ வேளாண் உற்பததியில கவனம் செலுத்தியது.
- ❖ மொத்த முதலீட்டில் 31% வேளாண்மைக்கும் , நீர்ப்பாசனத்துக்கும் ஒதுக்கப்பட்டது.
- ❖ பின்னர் தொழில் துறைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் சாதனைகள் : ( 1956 – 61 )

- ❖ கனரகத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது.
- ❖ தொழிற்துறையின் பங்கு 24% ஆக உயர்ந்தது.
- ❖ முதலிரண்டு திட்டங்களும் 4 % வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்தன.
- ❖ இந்த வளர்ச்சி விகிதங்கள் அடையப்படடதால் அவை வெற்றி பெற்ற திட்டங்களாகக கருதபபட்டன.
- ❖ இரண்டு மாதப் பயணத்துககுப் பிறகு இந்தியா என்று அவரால் நம்பப்பட்ட நிலப்பகுதியை அவர் வந்தடைந்தார்.
- ❖ ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் ஒரு புதிய கண்டமாகும்.
- ❖ தான் கண்டுபிடித்த நிலப்பகுதியை இந்தியா என்று அவர் தனது இறுதிக்காலம் வரை நம்பினார்.

அல்லது

ஆ)

இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பு :

இலக்கியத்தில் மறுமலர்ச்சி :

- ❖ தாந்தே , பெட்ரார்க் என்ற இரண்டு இத்தாலிய மொழி கவிஞர்களை பிளாரன்ஸ் உருவாக்கியிருந்தது.
- ❖ இடைக்கால கலாச்சாரத்தின் சுருக்கமாக தாந்தேயின் தெய்வீக இன் ியல் திகழ்கிறது.
- ❖ பெட்ரார்க் லத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகள் இரண்டிலும் படைப்புகளை உருவாக்கினார்.
- ❖ இவர் "இத்தாலிய மறுமலர்ச்சி இலக்கியத்தின் தந்தை" என்று கருதப்படுகிறார்.

கலையில் மறுமலர்ச்சி :

- ❖ டாவின்சி , வர்ஜின் ஆ.்ப் தி ராக்ஸ் , இறுதி விருந்து , மோனலிசா ஆகியன டாவின்சியின் படைப்புகளாகும்.
- ❖ ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயம் மைக்கேல் ஆஞ்சிலோவால் நவீனமயமானது.
- ❖ ரபேலின் "மடோனாவும் குழந்தையும்" என்ற பெயரிடப்பட்ட ஓவியமானது கன்னி மரியாளும் , குழந்தை இயேசுவும் இருப்பதை சித்தரிப்பதாக உள்ளது .

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் :

- ❖ நிக்கோலஸ் கோபர் நிகஸ் பூமியும் இதரக் கோள்களும் சூரியனை சுற்றி வருகின்றன.
- ❖ கலிலியோ கலிலி ஒரு தொலைநோககி கொண்டு சனி கிரகத்தின் சுற்றுவட்டங்கள் , சூரியனின் புள்ளிகள் ஆகியவற்றை கண்டுபிடித்தார் .
- ❖ வில்லியம் ஹார்வி மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து இறுதியில் நிருபித்தார்.

46. அ)

அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் :

- ❖ நாவாய் சட்டங்கள் , சர்க்கரைச் சட்டம் , தேயிலை வரிவிதிப்புச் சட்டம் , டவுண்ஷெண்ட் சட்டம் மற்றும் பொறுததுக் கொள்ள முடியாத சட்டங்கள் அமெரிக்க குடியேற்றங்களிடையே பெரும் வன்முறையை ஏற்படுத்தியது.
- ❖ இந்த சட்டங்களை நீக்க இங்கிலாந்து மன்னர் மூன்றாம் ஜார்ஜ்க்கு ஆலிவ்விடம் விண்ணப்பம் அளிககப்பட்டது
- ❖ ஆனால் மன்னர் அதனை நிராகரித்தார்.

போரின் போக்கு :

- ❖ 1776 ஜூலை 4 ல் அமெரிக்க குடியேற்றங்கள் விடுதலையை அறிவித்தன.
- ❖ அமெரிக்கப் படைக்கு ஜார்ஜ் வாஷிங்டனும் , இங்கிலாந்து படைக்கு வில்லியம் ஹோவும் தலைமை தாங்கினர்.
- ❖ ஹோவ் முதலில் சில இடங்களில் வென்றார். பின்பு 1777 இல் சரடோகா மற்றும் யார்க்டவுன் போரில் இங்கிலாந்து தோல்வியடைந்தது.

விளைவுகள் :

- 1783 இல் இங்கிலாந்து , அமெரிக்கா இடையே பாரிஸ் உடன்படிக்கை கையெழுத்தானது.
- அமெரிக்க விடுதலை இங்கிலாந்தால் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் அதிபர் ஆனார்.

அல்லது

ஆ)

ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என சொல்லக் காரணங்கள் :

- பிரஷ்யாவின் பிரதமராக பதவி வகித்த பிஸ்மார்க் பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானியப் பகுதிகள் ஒன்றிணைக்கப்பட வேண்டுமென கருதினார்.
- இதற்காக அவர் "இரத்தமும் , இரும்பும்" என்ற வலுவான கொள்கையை வைத்துக் கொண்டார்.
- ஜெர்மானிய ஒருங்கிணைவை அடைய மூன்று போர்களை நடத்தும்படி ஆயிற்று.
- ஷெல்ஸ்விக்கும் ,ஹோல்ஸ்டினும் டென்மார்க்கின் கட்டுப்பாட்டில இருந்த ஜெர்மானிய மாநிலங்களாகும்.
- 1864 இல் ஆஸ்திரிய பிரஷ்யாவின் கூட்டுப்படைகள் டென்மார்க்கை தோற்கடித்து வியன்னா உடன்படிக்கையின்படி அவ்விரு பகுதிகளும் பெறப்பட்டது.
- ஆஸ்திரியாவை வெனிஷிய பகுதியை விட்டு அப்புறப்படுத்த விரும்பிய அவர் பியட்மான்ட் சார்டினிய ஆதரவைப் பெற்றார்
- ஆஸ்திரிய பிரஷ்யப போர் ஏழு வாரங்கள் நடைபெற்றது. இதில் ஆஸ்திரியாவை தோற்கடிததார.
- தெற்கு ஜெர்மானிய மாகாணங்களை ஒன்றிணைக்கும் பொருட்டு பிரான்சை எதிர்க்க துணிந்தார்.
- எம்ஸ் தந்தி பிராங்கோ பிரஷ்ய போர் ஏற்பட வழிவகுத்தது.
- செடானில் நடந்த போரில் பிரான்ஸ் தோல்வியடைந்தது. இவ்வாறு ஜெர்மனியை பிஸ்மார்க் ஒருங்கிணைத்தார்.

47.அ)

முதல் உலகப்போருக்கான காரணங்கள் :

- ஜெர்மனி , ஆஸ்திரியா , ரஷ்யா ஆகிய நாடுகளை இணைத்து பிஸ்மார்க் உருவாக்கிய மூன்று பேரரசர்களின் கழகம் தோல்வியை சந்தித்தது.
- பின்னர் இதில் இத்தாலி இணைந்ததால் மூவர் கூட்டணியாக மாறியது.
- 1907 இல் பிரிட்டன் , பிரான்சு , ரஷ்யா ஆகிய நாடுகள் சேர்ந்து முக்கூட்டு நட்பு உருவாக்கப்பட்டது.
- ஆப்பிரிகக நாடான மொராக்கோவில் தனது தி ் ங்களுக்கு பிரான்சு செயல் வடிவம் கொடுக்க நினைத்தது. இதனை ஜெர்மனி எதிர்த்தது.
- ஆஸ்திரியாவின் பாதுகாப்பில் இருந்த போஸ்னியா , ஹெர்சிகோவினா ஆகிய பகுதிகளை இணைக்க ஆஸ்திரியா , ஹங்கேரி நினைத்தது.
- இதனால் செர்பியா ரஷ்யாவிடம் உதவி கோ ியது.
- முதல் பால்கன் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது. மாசிடோனியா பிரிக்கப்பட்டு அல்பேனிய என்ற நாடு உருவாக்கப்பட்டது
- பால்கன் போரில் நடைபெற்ற பிரசசினைகள் காரணமாக ஆஸ்திரியாவுக்கு எதிராக போராட்டங்கள் தீவிரமடைந்தது.
- இச்சூழலில் ஆஸ்திரியா இளவரசர் பிரான்ஸ் பெர்டினார்டண்டு 1914 இல் ஜூன் 28 அன்று செர்பிய இளைஞன் பிரின்சிப் என்பவரால் செராஜிவோவில படுகொலை செய்யப்பட்டார்.
- இதுவே போருக்கான உடனடி காரணமாகும்.

விளைவுகள் :

- போரின் முடிவில் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை கையெழுத்தானது.
- ஜெர்மனி மீது போர் இழப்பீடு கோரப்பட்டது.
- பொருளாதார பெரு மந்தம ஏற்பட்டது. 1920 இல் பன்னாட்டுச் சங்கம் அமைக்கப்பட்டது.

அல்லது

ஆ) இரண்டாம் உலகப் போரில் (1939 -1945 ) நிகழ்ந்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடிட்டு காட்டவும் .

# காலக்கோடு

( 1 அலகு = 5 ஆண்டுகள் )

## இரண்டாம் உலகப் போர்

